செ.வெ. எண்: 581 நாள்: 13.0

# செய்தி வெளியீடு

13-9-07

## அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி ஆறு சதவிகிதம் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

மத்திய அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியை 1.7.2007 முதல் உயர்த்தி அறிவிக்கப்பட்டதை யொட்டி, தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படியை 1.7.2007 முதல் ஆறு சதவிகிதம் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் இன்று அறிவித்துள்ளார்.

உயர்த்தப்பட்டுள்ள இந்த அகவிலைப்படி ரொக்கமாக வழங்கப்படும். அகவிலைப்படி உயர்வின் காரணமாக அரசுக்கு கூடுதலாக ஆண்டொன்றுக்கு 817 கோடி ரூபாய் செலவாகும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.